DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.93/2018 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 11 |
| Name | திரு.கிங்ஸிலி தேவனாந்த் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | காவல் ஆய்வாளர், முத்தையாபுரம் காவல் நிலையம், தூத்துக்குடி |
| Religion | |
| Age | |

**( எதிரிகள் ஆஜரில்லை: எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 25-05-2026.(நேரம்: 01.36PM )**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது முத்தையாபுரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2.இவ்வழக்கில் கடந்த 13.07.2016 ஆம் தேதி 12.00 மணிக்கு முதல் நிலை காவலர் திரு. மாரிமுத்து நிலைய உத்தரவு படி நிலைய குற்ற எண் 237/2016 சட்டபிரிவு 379 இதச வாக பதிவுசெய்த வழக்கை முதல் விசாரணைக்கு வேண்டி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. இமானுவேல்

ஜெயசேகர் அவர்களிடம் ஒப்படைத்து பின்பு மேல் விசாரணைக்குவேண்டி வழக்கு கோப்பை எனது வசம் ஒப்படைத்தார்.

3.வழக்கு கோப்பை எடுத்துக்கொண்டு வழக்கு சம்பவ இடம் சென்று பார்வையிட்டதில் இவ்வழக்கின் சாட்சிகளான பிச்சையா மற்றும் பூசும்பெருமாள், Ssi திரு. இமானுவேல் ஜெயசேகர் அவரிடம் கூறியதுபோல் என்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவுசெய்யப்படவில்லை.

4. பின்பு சாட்சிகள் இசக்கியம்மாள், சுந்தரம், ரமேஷ், மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல் நிலை காவலர் திரு. மாரிமுத்து ஆகியோர்களை விசாரித்தப்போது முன்பு போல் ஒத்து கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

5. பின்பு 04.12.2016 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் சாட்சிகள் விஏஓ திரு. ராமசாமி மற்றும் சுயம்பு ஆகியோர்கள் முன்னிலையில் ஆறுமுகமங்களம் பிள்ளையார் கோவில் முன்பு ரோந்து செய்துக்கொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரிகளை மடக்கி பிடித்து விசாரித்தப்போது தாமாக முன்வந்து யாருடைய வற்புறுத்தலும் இன்றி சாட்சிகள் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.**அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. பின்பு அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அதே தேதியில் பகல் 14.00 மணிக்கு சாட்சிகள் திரு.ராமசாமி விஏஓ மற்றும் சுயம்பு ஆகியோகள் முன்னிலையில் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட பச்சை கலர் பாலிடின் கவரில் சுற்றி வைக்கப்பட்டிருந்த ரூபாய் 80,000/– தை இவ்வழக்கின் எதிரி டேவிட் எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றி

அத்தாட்சி பிறப்பித்தேன்.**அந்த அத்தாட்சி அசாஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. பின்பு அத்தாட்சி மூலம் கைப்பற்றிய ரூபாய் 80,000/- ஐ படிவம் 91 மூலம் பிஆர்எண் 423/2016 பிரகாரம் நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது. **அந்த படிவம் 91 சாபொ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

8.பின்பு சாட்சிகளான விஏஓ ராமசாமி, சுயம்பு கைதுசெய்ய உதவியாக இருந்த காவலர் தருமர் , காவலர் ரீகன் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

9.பின்பு இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரி டேவிட்டை நிலையம் கொண்டு வந்து நிலைய ஆவணங்களில் பதிவு செய்து உச்ச நீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி தக்க வழி காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன்.

10. பின்பு இவ்வழக்கின் எதிரி சஞ்சையை சம்பிரதாய கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன்.

11.இத்துடன் என்னுடைய விசாரணையை முடித்து 30.12.2016 ஆம் தேதி 1,2 எதிரிகள் மீது 379 இதசவாக குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 03.55PM)**

இல்லை

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.